
# ஆபத்தான மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டன



கோலாலம்பூர், ஜூன் 29- கோலாலம்பூர் மாநகர் மன்றம் ஆபத்தான 173 பழம்பெரும் மரங்களை வெட்டி சாய்த்தது என்று நேற்று முன்தினம் நாடாளுமன்ற மக்களவையில் தெரிவிக்கப்பட்டது.

பொது மக்களின் பாதுகாப்பிற்கு இம்மரங்கள் எல்லாம் மருட்டலாக விளங்கியது என்று கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா தெரிவித்தார். பழம் பெரும் மரங்களை வெட்டி சாய்ப்பது குறித்து தொடர்ச்சியாக பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும். பழம்பெரும் மரங்களால் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் மாநகர் மன்றம் மிக கவனமாக செயல்பட்டு வருகிறது. நிழல் மரங்களை வழக்கமாக பராமரிக்கும் வண்ணம் கோலாலம்பூர் மாநகர் மன்றம் மொத்தம் 21 குத்தகையாளர் களை நியமனம் செய்துள்ளது. வங்சா மாஜு தொகுதி நாடாளு மன்ற உறுப்பினர் ஸாஹிர் ஹாசான் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா விளக்கம் தந்தார். தனியார் பகுதியில் ஆபத்தான மரங்கள் வீற்றிருப்பது குறித்து மாநகர்மன்றம் 65 அறிவிப்பு கடிதங்களை அனுப்பியுள்ளது.